# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • ஜூலை 6, 2019

Weekly E-paper • JULY 6, 2019




# ராகுலின் கடிதமும் வைகோவின் முழக்கமும்!

சுப. வீரபாண்டியன்




**பாஜக - நாம் தமிழர்**

-டான் அசோக்

**நிதிநிலை அறிக்கை**

தலையங்கம்



**‘தர்மபிரபு’**

- இரா.உமா

கருஞ்சட்டைத் தமிழர்
ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்
வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2050 ● ஜூலை 6, 2019 Weekly E-paper ● JULY 6, 2019

# ராகுலின் கடிதமும் வைகோவின் முழக்கமும்!

● சுப. வீரபாண்டியன்

இரண்டும் வேறு வேறுதான். என்றாலும், இரண்டிற்குள்ளும், பதவி பற்றிக் கவலைப்படாத ஓர் ஒற்றுமையும். உறுதியும் உள்ளன.

தேர்தலில் ஒரு கட்சி பெரிய தோல்வியைச் சந்திக்கும்போது, அதற்குப் பொறுப்பேற்று அக்கட்சியின் தலைவர் பதவி விலகுவதும், பிறகு கட்சித் தலைவர்கள், தொண்டர்கள் வேண்டுகோளை ஏற்று அதனைத் திரும்பப் பெற்றுக்கொள்வதும், இயல்பாக நடக்கக் கூடியவைகளே. கட்சியின் நலன் கருதி, அப்படித் திரும்பப் பெறுவதும் தவறன்று.

ஆனால், ராகுல் காந்தி இறுதி வரையில் தன் முடிவை மாற்றிக் கொள்ளவில்லை. அது வெறும் பிடிவாதம் இல்லை என்பதை, அவருடைய திறந்த மடல் எடுத்துக் காட்டுகிறது. பொதுவாழ்வில் வெளியிடப்படும் கடிதங்கள், அறிக்கைகள் கூடச் சில வேளைகளில் ஓர் ஆவணம் போல் ஆகிவிடும். அப்படிப்பட்ட வரலாற்று ஆவணங்களில் ஒன்றாக ராகுலின் கடிதம் விளங்குகிறது.

பாஜக வின் மீதோ, அக்கட்சியின் தலைவர்கள் மீதோ, தனக்கு எவ்வித வெறுப்பும் இல்லை என்று கூறும் ராகுல், அக்கட்சியின் சித்தாந்தங்களை என் உடலின் ஒவ்வொரு அணுவும் எதிர்க்கிறது என்கிறார். மிக அழுத்தமான இவ்வரி, அவரின் உயர்வை உலகுக்குக் காட்டியுள்ளது. தனிமனித வெறுப்புகளுக்கு இடமில்லை என்பதையும், தேர்தல் தோல்வியால் துவண்டு போகவில்லை என்பதையும் இவ்வரி பளிச்சென்று சொல்கிறது.

அந்தச் சித்தாந்தம் என்ன? கடிதத்தின் இறுதிப் பகுதியில், அதுவும் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. "இந்தியா எப்போதும் ஒரு குரலில் பேசியதில்லை" என்கிறார் ராகுல். அப்படிப் பேசவும் வேண்டியதில்லை என்பதே அவர் கருத்து. அந்தப் பன்மைத்துவத்தை ஒடுக்கி, ஒரே நாடு, ஒரே பண்பாடு என்று ஆக்க முயலும் பாஜகவின் சித்தாந்தமே தன் எதிரி என்பதை அவர் விளக்கியுள்ளார்.



சுருக்கமாகச் சொன்னால், பன்மைத்துவம் என்பது ஜனநாயகம். ஒரே குரல் என்பது சர்வாதிகாரம். தான் எந்தப் பக்கம் என்பதை ராகுல் சொல்லிவிட்டார். நாளை அதனை நாடு சொல்லும். கட்சித் தலைவர் பதவியை விட, நாட்டின் ஜனநாயகப் போரே பெரியது என்று முடிவெடுத்துள்ள ராகுலைப் பாராட்டியே தீரவேண்டும்.

அதே போல, விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியதற்காக, ஓராண்டு சிறைத் தண்டனை பெற்றுள்ள, மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, "குறைந்தபட்சத் தண்டனை வேண்டுமென்று எப்போது கேட்டேன்? ஆயுள் தண்டனை வேண்டுமானாலும் கொடுங்கள்" என்று நீதிமன்றத்திலேயே முழங்கியுள்ளார்.

இதனால் அவர், மாநிலங்களவைக்குச் செல்வது தடைப்படுமோ என்ற கவலை உள்ளது. அதற்கு வாய்ப்பில்லை, அவர் தேர்வு பெற்றுவிடுவார் என்று சட்ட வல்லுநர்கள் கூறுகின்றனர். எனினும் பதவி குறித்துக் கவலைப்படாமலும், சிறைக்கஞ்சாமலும் வைகோ தன் உறுதியை வெளிப்படுத்தியுள்ளார்.

ராகுல், காங்கிரஸ் கட்சியின் தலைவராக நீடிக்க வேண்டும் என்பதும், வைகோவின் குரல் மாநிலங்களவையில் ஒலிக்க வேண்டும் என்பதும்தான் நம் விருப்பம்.

ஆனாலும் என்ன, பதவிகளை விட, நாட்டு நலனே முதன்மையானது என்று இருவரும் ஒரே குரலில் ஒலித்துள்ளனர். அவர்களின் உறுதியை நாடு உணர்ந்து போற்றட்டும்!

•

# பாஜக - நாம் தமிழர்
# வேறுவேறு அல்லர், ஒருவரே!

சிறுவயதில், அண்ணன் எம்.ஜி.ஆரையும் தம்பி எம்.ஜி.ஆரையும் நம்பியார் பிரித்துவிடுவார். அண்ணன் எம்.ஜி.ஆர்தான் தனது எதிரி என தம்பி எம்.ஜி.ஆர் நினைத்துக் கொண்டிருப்பார். சண்டை எல்லாம் கூடப் போடுவார்கள். ரெண்டு பேரும் வேறு வேறு மேனரிசங்கள் செய்வார்கள். ஒருவருக்குக் கன்னத்தில் ‘மரு’ இருக்கும், இன்னொருவருக்கு இருக்காது. ஒருவர் கதாநாயகியின் கைகளை மசாஜ் செய்தபடியே ‘க்யூட்டாக’ லவ் பண்ணுவார். இன்னொருவருக்கோ காதல் என்றாலே பிடிக்காது. இப்படி ஏதேதோ வித்தியாசம் காட்ட ரொம்பக் கடுமையாக முயற்சிப்பார்கள். ஆனால் நமக்கோ ரெண்டுமே ஒரே எம்.ஜி.ஆர்தான் என்றும், கடைசியில் எப்படியும் சேரத்தான் போகிறார்கள் என்றும் அவர்களின் ‘முகரை’களைப் பார்த்த அடுத்த கணமே தெரிந்துவிடும். இருந்தாலும், "என்னதான் செய்றாய்ங்கனு பார்ப்போமே," என பொறுமையாகக் காத்திருப்போம். திரையில் உள்ள எம்.ஜி.ஆர்களுக்கு கடைசியில்தான் தாங்கள் வேறுவேறல்ல, ஒரே வயிற்றில் பிறந்த அண்ணன் தம்பிகள் என்று தெரியும். உடனே, "அண்ணே... தம்பி... அண்ணே..." எனக் கண்ணீருடன் கட்டித்தழுவிக் கொள்வார்கள்.

பாஜக சங்கிகளும், நாம் தமிழர் தம்பிகளும் அப்படித்தான். தாங்கள் வேறுவேறு என நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.



ஆனால் அவர்கள் இருவரும் ஒன்றுதான் என நமக்கு முதலில் இருந்தே தெரிந்தாலும், அவர்களுக்கிடையே இருக்கும் ஒற்றுமைகளான பெரியார் எதிர்ப்பு, திராவிட எதிர்ப்பு, மும்மொழி ஆதரவு, நுழைவுத்தேர்வு ஆதரவு என எவ்வளவுதான் பல சான்றுகளுடன் விளக்கிச் சொன்னாலும் அவர்களில் சிலர் அதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். சிலருக்குப் பொசுக்கென்று கோபம் கூட வருகிறது.

ஆனால் இன்றுகூட பாருங்கள், திரிணாமூல் காங்கிரஸ் எம்.பி, "திராவிடம்" எனப் பேசியவுடன் இரண்டே இரண்டு தரப்புக்குதான் அடிவயிற்றில் அல்சர் ஏற்படுகிறது. ஒன்று பாஜக. இன்னொன்று நாம் தமிழர். இப்படி நாம் பல உதாரணங்களைக் காட்ட முடியும். ஆனால் என்ன? நாங்கள் ரெண்டு பேரும் ஒன்று இல்லை என எம்.ஜி.ஆர்களைப் போலவே சாதிப்பார்கள். சரி விடுங்கள். எப்படியும் திரைக்கதை முடியும்போது, "அண்ணே... தம்பி... அண்ணே..." என கட்டிக்கொண்டுதானே ஆக வேண்டும். அப்போது இருக்கிறது கச்சேரி!

**-டான் அசோக்**
முகநூல் பதிவிலிருந்து

---

# தமிழிசையும்- சீதாராமனும்

பி.ஜே.பியுடன் எனக்கு என்ன வாய்க்கா வரப்பு தகராறா? நான் ஒரு கிருத்துவப் பள்ளியில் படித்தேன். இசுலாமிய வீட்டிலேதான் சாப்பிட்டேன். எங்கள் வீட்டில் இருந்தேன். மூன்று பேரும் ஒன்றாக வளர்ந்தோம். ஒரு குழப்பமும் இல்லை. இந்த குழப்பத்தை ஐந்து வருடத்தில் உருவாக்கியது நீ என்றால், எனக்கு நீ வேண்டாம். வெளியே போ. எனக்கு ஒரு பிரச்சனையும் இல்லை. நீ பாலம் கட்டு, நல்லவனைக் கூப்பிட்டுச் சிலை வை. எனக்கு ஒரு பிரச்சனையும் இல்லை. எனக்கு இந்த தேசத்தின் ஆதாரம் எது என்றால் வேறுபாடு இன்றி நாங்கள் வாழ்வதுதான். அதைப் பாழாக்குவதைத் தான் நீ செய்வாய் என்றால், எனக்கு நீ வேண்டாம்.

இசுலாமிய வீடுகளில்தான் நான் வாழ்ந்தேன். மதுரை முனிச்சாலையை ஒட்டி இருக்கும் இசுலாமியர்களின் வீடுகளினால் ஒரு குழப்பமும் வந்தது இல்லை, சாதாரணமாக இருந்திருக்கிறோம். பள்ளிக்கூடம் முதல் கல்லூரிப் படிப்பு வரை கிருத்துவப் பள்ளியில் தான் படித்தேன். ஒரு குழப்பமும் இல்லை. அதைக் கேடென்று நீ சொல்வதால் நான் வேண்டாம் என்கிறேன்.

தமிழிசை சௌந்தரராஜன் ஒருபொழுதும் நிர்மலா சீதாராமன் ஆகவே முடியாது. எனக்குத் தமிழிசை சௌந்தரராஜனை அதிகம் பிடிக்கும். என் அக்காவைப் போல் ஒரு தோற்றத்தில் இருக்காங்க. எனக்கு, பார்க்கும் பொழுது நெருக்கமாக இருக்காங்க. அவங்களைப் பலமுறை பார்த்திருக்கிறேன். எனது சிறு வயதில் இருந்து பார்த்திருக்கிறேன். எதிர் வீட்டில், பக்கத்து வீட்டில், கடைக்குப் போன இடத்தில், எல்லா இடத்திலேயும், பள்ளிக்கூடத்தில் ஆசிரியராக, பேருந்தில், எல்லா இடத்திலேயும் பார்த்திருக்கிறேன். அப்படிப்பட்ட ஆளுதான் அவங்க..

தேர்தலில் அவ்வளவு வேலை செய்தாங்க. தோற்போம் என்று தெரிஞ்சும் வேலை செஞ்சாங்க. நிர்மலா சீதாராமன் என்ன செஞ்சாங்க, எங்க பார்த்திங்க அவங்களை? ஆனா அவங்க இன்னிக்கு மந்திரி ஆயிட்டாங்க. எங்க அக்காவுக்கு மட்டும் இது புரியாது.

எங்க அக்கா இன்றைக்கு என்ன சொல்லுறாங்க. எனக்கு இந்தி தெரியாததால்தான் என்னால் மத்திய அமைச்சர் ஆக முடியலனு. இந்தி படிக்காததால் நான் எனது வாழ்க்கையில் முன்னேற முடியாது போய்ட்டேன்னு சொல்றாங்க.

எனது வீட்டு பக்கத்துலதான் இந்தி பிரச்சார சபா இருக்கு. தமிழ் நாட்டிலே பூட்டிட்டோமா? போய் படிங்க. இங்கு இந்தி படிக்காதிங்கனு யாரையும் சொல்லல. நல்லா படிங்க. இந்தி பிரச்சார சபா இருக்கும், போய்ப் படிங்க. என்னைய படின்னு நீ சொல்லாத. அதுதான் இங்கே பிரச்சனை. என்னைய படின்னு நீ சொல்லாத. இந்திப் பிரச்சார சபா திறந்து தான் இருக்கு, யாரும் தமிழ்நாட்டில் இந்தி பிரச்சார சபாவைப் பூட்டிவைக்கவில்லை. இந்திப் பிரச்சார சபாவில் மாணவர்கள் அதிகரித்துக் கொண்டுதான் இருக்காங்க ஒரு பிரச்சனையும் கிடையாது. போய் படிங்க. ஆனாஅதை என்னை படிச்சுத்தான் ஆகணும்னு சொன்னா படிக்கமாட்டேன்.

தமிழ் நாட்டில எவன் நம்மள மதிக்கலையோ அவனைப் பிடிக்கவே பிடிக்காது, நீ மோசமாகக் கூட இரு, எப்படி வேண்டுமானாலும் செய். ஆனா நீ பார்க்கும் பொழுது அண்ணே வாங்கண்ணேன்னு சொல்லணும் இல்லையா?

தமிழ் நாட்டில் என்ன கோபம் வந்துடிச்சுன்னா, என்ன நீ அவ்ளோ பெரிய அப்பாடக்கரானு. எதுக்குமே வரமாட்டங்கிற, புயல் அடிச்சாலும் வெயில் அடிச்சாலும் வர மாட்டேங்கிற அந்தக் கோவம் தமிழ்நாட்டுல இருக்கு. அதை அவங்க புரிஞ்சிக்கணும்.



**-கரு.பழனியப்பன்**
(ஒரு கூட்டத்தில் பேசியது)

ஆசிரியர்
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில். இளங்கோவன்

ஆசிரியர் குழு
தமிழ்மறவன்
உதயகுமார்
வெற்றிச்செல்வன்

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்
karunchattai@gmail.com

டுவிட்டர்
suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-2472 6408

## சேலம் அமைப்புக் கூட்டம்



04-07-2019 அன்று சேலம் மாவட்டப் பேரவையின் அமைப்புக் கூட்டம் மாவட்டத் தலைவர் சுந்தரவதனம் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், ஜுலை மாதம் 'விழிப்பூட்டும் மொழிப்போர்' என்ற தலைப்பில் தோழர் செந்தலை கவுதமன் அவர்களை அழைத்துக் கருத்தரங்கம் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது. மேலும் தோழர் திராவிட மணி மாவட்டப் பொருளாளராக நியமனம் செய்யப்பட்டார். இக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராகத் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் மாநில அமைப்புச் செயளாலர் புலேந்திரன் கலந்து கொண்டார்.

## அறந்தாங்கிப் பொதுக்கூட்டம்



30-06-2019 அன்று புதுக்கோட்டை மாவட்டம் மேற்பனைக்காடு எனும் ஊரில் நடைபெற்ற தி.மு கழகப் பொதுக்கூட்டத்தில் திராவிட இயக்கத் தமிழர் பேரவைப் பொதுச் செயலாளர் தோழர் சுப.வீரபாண்டியன், சிவகங்கை நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்திக் சிதம்பரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மீமிசல் பொதுக் கூட்டம்



01-07-2019 அன்று புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம் மீமிசல் தி.மு. கழகப் பொதுக்கூட்டத்தில் தோழர் சுப.வீரபண்டியன்.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## கழனிக்குள் மேயும் நிதிநிலை அறிக்கை

*2019 - 2020 ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீ தாராமன் நாடாளுமன்றத்தில் தாக்கல் சயெ்தார்.*

*இதைப் பார்க்கும்போது அலங்காரமான வார்த்தைகளை உள்ளடக்கிய ஒரு அறிக்கையாகத்தான் தெரிகிறதே ஒழிய, மக்களுக்குப் பயன் தரக்கூடியதாக இல்லை.*

*குறிப்பாக, பெட்ரோல், டீசல் விலை உயர்வு, சரக்குப் போக்குவரத்துக் கட்டண உயர்வு, தங்கம் மீதான வரிவிதிப்பு ஆகியவை மக்களின் வாழ்க்கையைக் கடுமையாகப் பாதிக்கும் நிலை ஏற்படும். பெட்ரோல்-டீசல் விலை உயர்வும், சரக்குப் போக்குவரத்துக் கட்டண உயர்வும் பொருள்களின் விலைவாசி உயர்வுக்குக் காரணமாகி, சமூகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.*

*மிகச்சாமானிய மக்கள் பயன்படுத்தும் எரிவாயு சிலிண்டர்களுக்கு அளிக்கப்படும் மானியத்தைக் குறைக்க இந்நிதி அறிக்கை வழி வகை செய்கிறது.*

*50 லட்சம் கோடி நிதி திரட்டும் முயற்சியில் இரயில்வே தனியார் மயமாக்கப்படும் என்ற அறிவிப்பு மக்களைப் பெரிதும் பாதிக்கும்.*

*சாதாரண மக்கள், நீண்ட தொலைவுப் பயணத்திற்குப் பேருந்துகளைவிட இரயில்களையே பெரிதும் சார்ந்திருக்கிறார்கள்.*

*இரயில்வேயை கார்ப்பரேட்டுகளுக்குத் தாரைவார்த்து, தனியார்மயமாக்கி, அவர்களை வாழவைத்துள்ளனர். பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையைப் பெரிதும் பாதிக்கும் இதுபோன்ற அறிவிப்புகள், இந்நிதிநிலை அறிக்கையைக் கானல்நீர் ஆக்கிவிடுகின்றன.*

*பத்திரிகைத் துறை, ஜனநாயகத்தின் ஒரு தூண் என்று சொல்வார்கள்.*

*ஆனால், பத்திரிகை அச்சடிக்கத் தேவையான 'நியூஸ் பிரிண்ட்' தாள் இறக்குமதிக்கு 10 சதவீதம் சுங்கவரி விதிப்பதாக அறிக்கை சொல்கிறது.*

*இது பத்திரிகைகளின் குரல்வளையை நெறித்து அதன் கருத்துச் சுதந்திரத்தைத் தகர்த்தெறியும் வகையில் இருக்கிறது.*

*ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே பண்பாடு என்பதுடன், இப்போழுது ஒரே வகையான மின்சாரம், நாடு முழுவதும் கொடுக்க வழிவகை செய்வதாக நிதிநிலை அறிக்கை சொல்வதைப் பார்த்தால் மறைமுகமாக, இப்போதிருந்தே ராமராஜ்ஜியத்திற்கு வழிகோலுவதாகத் தெரிகிறது.*

*நிதிநிலை அறிக்கை வாசிப்பின்போது, நிர்மலா சீதாராமன், புலவர் பிசிராந்தையாரின் புறநானூற்றை மேற்கோள் காட்டி, வயலில் விளையும் பயிரை அளவறிந்து கவளமாகக் கொடுத்தால் அது பலநாள்களுக்கு வரும் என்றும், மாறாக, யானையைக் கழனிக்குள் விட்டால் அது ஒட்டுமொத்தப் பயிர்களையும் நாசம் செய்துவிடும் என்றும் சொல்லி இருக்கிறார்.*

*இந்த நிதிநிலை அறிக்கை, யானை கழனிக்குள் மேய்ந்து பயிர்களுக்குப் பெரும் சேதத்தையும், அழிவையும் ஏற்படுத்துவதாகவே இருக்கிறது.*

# தர்மபிரபு

## வந்தா மலை, போனா 'மயிலாப்பூர்'

● இரா.உமா

'படத்தத் தடை செய்றதுக்குள்ள போய்ப் பாத்துரனும்' ங்கற முனைப்போட போய்ப் பாத்த படம். திரு முத்துக்குமரன் இயக்கத்துல, திரு யோகிபாபு நடிச்ச, "தர்மபிரபு" திரைப்படம். முழு நீள நகைச்சுவைப் படம், ஆனா, அரசியல் தொடங்கி சாதி வரைக்கும் அடிச்சித் தொவைச்சி தொங்கவிட்ருக்கு. எமலோகம், சொர்க்கம், நரகம்ங்கற கற்பனைகள தொவைக்கிற கல்லா பயன்படுத்தியிருக்கிறதால, துணி நல்லா வெளுத்திருக்கான்னு பாக்கனுமே தவிர, கல்லப் பத்தியெல்லாம் கவலப்படக்கூடாது. 'யாருடைய மனதாவது புண்பட்டால், குற்றம் உள்ள நெஞ்சு குறுகுறுக்கும்' னு Disclaimer கார்டு போடும்போதே, 'அட, இங்க பார்ரா'ன்னு நம்மள நிமிர்ந்து உக்கார வச்சிட்டு, தம்பாட்ல வேலையப் பாக்குது படம். தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு, சிலை கடத்தல், கூவத்தூர் கூத்து, டயர் நக்கி அமைச்சரவை, ஹைட்ரோகார்பன், விவசாயிகள் தற்கொலைனு மக்கள் அனுபவிக்குற கொடுமைகள் எதையும் விட்டுவைக்கல. சொல்றதுக்கு ஒன்னுமில்லன்னா ஓங்கம்மா ஓட்டு வீட்டுலதானடி புள்ள பெத்தாங்குற மாதிரி, சில பேரு அப்பப்ப எடுத்துவுடுற 'வாரிசு அரசியல்' பத்தியும் இந்தப் படம் வச்சி செஞ்சிருக்கு.

சித்திரகுப்தனுக்கு யோசன சொல்றதுக்காக நரகத்துல இருக்குற 'கோ' ரங்கசாமிங்கற ஒருத்தரக் கூட்டிட்டு வராங்க. ஒரே பச்சக்கலர்ல கொழா சட்ட போட்டுக்கிட்டு, தலையில ஒரு 'மயிலாப்பூர்' (ஹைகோர்ட்டாவது...ன்னு சொல்றதெல்லாம் அவுட் ஆஃப் டிரெண்ட் ஆக்கிடுச்சி இந்தப் படம்) கூட இல்லாம, நெத்தியில குங்குமப் பொட்டோட அந்தக் கேரக்டர் என்ட்ரி ஆகுறப்போ, பாப்பானக் காணோம்னு டிவியில வந்து கேட்டுக்கிட்டே இருந்தாரே அவரு மாதிரியே இருக்கேன்னு பாத்துட்டிருக்கிறப்பவே, எமனக் கவுக்குறதுக்கு ஒரு யோசன சொல்வாரு பாருங்க...(யோசன என்னன்னு படத்துல பாத்துக்கோங்க) அங்க நம்ம டவுட்டு கன்பார்ம் ஆகுது. நம்பிக்கையில்லன்னா, இந்தக் குறளுக்கு என்ன பொருள்னு பாத்துக்கோங்க.

"நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்திற் பிறந்தார் வாய்ச்சொல்"

அப்புறம் சிவபெருமான் (நான் கடவுள் ராஜேந்திரன்) குத்து டான்ஸ் போடுறாரு, அவர எமன் யோகிபாபு ராயபுரம் பாசையில அப்பப்போ கலாய்க்கிறாரு..,இது இந்துக்களோட மனச புண்படுத்தியிருச்சின்னு, 'பண்பட்ட ந.சு. நடிகர் சேகரு முகநூல்ல கதறியிருக்காரு. சிவன இதுவரைக்கும் யாருமே இப்பிடி அசிங்கப்படுத்துனதில்லையாம்...இந்தக் கடவுள் கருமாந்திரக் கதையெல்லாம் இங்க யாருக்குமே தெரியாதுன்னு நெனைக்கிறாரு போலருக்கு. அதத்தான் அந்த ஈரோட்டுக் கெழவன் கடப்பாரையால தோண்டி எடுத்து வெளிச்சம்போட்டுக் காட்டிட்டாரே, இதுக்குமேல என்னருக்கு?. எங்க பாத்தாலும், ராமனும், அனுமானும் தெருத்தெருவா பிச்சை எடுத்திட்டிருக்காய்ங்க, இந்த லட்சணத்துல சிவபெருமான குத்து டான்ஸ் ஆட விட்டுட்டாங்கன்னு பொலம்பல் வேற. அப்புறம், அவ்வளவு பெரிய 'ஜீனியச' இப்பிடிக் காட்டலாமான்னு கேக்குறாரு ந.சு.நடிகர்...அந்த ஜீனியஸ் தன்னத் தானே அரசியல் புரோக்கர்னு சொல்லிக்கிட்டாரே, அதுக்கு என்ன அர்த்தம்? அப்புறம் எம தர்மனோட மனைவி சரக்கடிக்கிற மாதிரி காட்டிட்டாங்களாம்... முப்பத்து முக்கோடி தேவர்களும் சோம பானம், சுரா பானத்துல முங்கி எந்திரிப்பாங்கன்னு உங்களாவாதான சொல்லியிருக்காங்க சேகரு.

முதல் பாதிவரைக்கும் அரசியல போட்டு வெளுக்குற படம், அடுத்த பாதியில, சாதிய வெள்ளாவியில வச்சி அவிச்சி எடுக்குது. ஏன்னா, மதத்தோட அழுக்கையும் சேத்து இந்த சாதிச் சனியந்தான சொமக்குது. அந்தச் சனியன சொமந்துட்டுத் திரியிற ஒரு அரசியல் கட்சியோட தலைவன எப்படி அழிக்கிறதுன்னு தெரியாம, மண்டயப் பிச்சிக்கிட்டு இருக்கிற எமதர்மன், சாதிச் சனியன ஒழிக்கிறதுக்கு அவங்கதான் சரியான யோசன சொல்ல முடியும்னு முடிவுபண்ணி, அந்த நாலு பேர கூட்டிட்டு வரச் சொல்றாரு. தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், காந்தியடிகள், நேதாஜி இவுங்க நாலு பேரும் வராங்க. அப்போ, பெரியாரும், அம்பேத்கரும் சொல்ற யோசனப்படி, ஒன் பிளஸ் ஒன் திட்டத்த வகுக்குறாரு எமதர்மன். அந்தத் திட்டத்தின்படி, உழைக்கும் மக்கள் கட்சியோட தலைவர் குமாரதாசன எமலோகத்துக்குக் கொண்டு வந்து தண்டிக்கிறதன் மூலமா, பூலோகமும், எமலோகமும் பெரிய அழிவுல இருந்து தப்பிக்கிறதா படம் முடியுது.



அந்தக் குமாரதாசன் கேரக்டர காட்சிப்படுத்தியிருக்கிற நுணுக்கத்தப் பாக்கும்போது, 'ஆத்தாடி...இயக்குனருக்கு எம்புட்டுத் துணிச்சல் பாரேன்னு' பாராட்டாம இருக்க முடியல. கொள்ளு திங்கிற குதிர குப்புறத் தள்ளிவிடுறதோட, குழியவும் பறிக்குமாம், அத மாதிரி, சாதி வெறிய ஏத்தி ஏத்தி இளைஞர்கள சீரழிச்சிட்டு, கடைசியில அந்த சாதி வெறிக்கு அவுங்களயே பலி கொடுக்கிற, அசிங்கமான சுயநல சாதி அரசியல் எவ்வளவு கொடூரமானது அப்படீங்கறத, மனுசத் தன்மையே இல்லாத குமாரதாசன் கேரக்டர் மூலமா காட்டியிருக்கு இந்தப் படம். ஒவ்வொரு காட்சியும், அந்த சாதி அரசியல்வாதி பேசுற வசனங்களும், சாதி ஒழிப்புப் போராட்டத்த தீவிரப்படுத்த வேண்டிய கட்டாயத்த நமக்கு உணர்த்துது. என்னோட சாதிதான் எனக்கு பெரிய 'மயிலாப்பூர்'னு சொல்லிட்டுத் திரிஞ்ச அதே தலைவன், எமன் சலுகை தரேன்னு சொன்னதும், 'எஞ்சாதி ஒழிக, எஞ்சாதி ஒழிக'ன்னு கத்துற காட்சி, சாதி அரசியலுக்குப் பலியாயிட்டிருக்கிற இளைஞர்களுக்கு ஒரு செய்தியச் சொல்றதா தோணுது. இந்த சாதித் தலைவர்கள நம்பினா, அவுங்க தோட்டத்துக்கு உரமாத்தான் ஆக முடியுமே தவிர, என்னிக்குமே மனுசங்களா வாழ முடியாது.

அம்மா, அப்பாவுக்குப் பொறந்த மக்கள் வாழுற சமூகத்துல, சாதிக்குப் பொறந்த எவனுக்கும் எடங்கிடையாதுன்னு நம்ம இளைஞர்கள் சொல்லனும், சொல்ல வைக்கனும்...அதுக்குப் பெரியார்(கொள்கைகள்) மறுபடியும் தன்னோட சுற்றுப்பயணத்தத் தொடங்கனும், அம்பேத்கர்(சிந்தனைகள்) சமத்துவத்துக்கான சட்டங்கள இயற்றனும்.

பல எடங்கள்ல, பெண்கள வாங்கடி, போங்கடின்னு ஓவராப் பேசி கலாய்க்கிறத ஏத்துக்க முடியாது. மத்தபடி, வசனங்கள் ஆழமா இல்ல, அகலமா இல்லங்கற மாதிரியான துக்கடா காரணங்களக் கண்டுபிடிச்சி விமர்சனத்த அள்ளிவிடாம, படக்குழுவோட துணிச்சல பாராட்டுவோம்.

தர்மபிரபு – மக்கள் மனசோட எதிரொலி... படம் பாருங்க... பரப்புங்க. ●